# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணை மதிப்பீட்டு பரீட்சை – 2022

| தரம் - 07 | கர்நாடக சங்கீதம் | நேரம்: 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..............................................................................................

**பகுதி - I**

**01. மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

01. 'கல்வித் தெய்வம்' என்ற பாடல் எக் கடவுளைத் துதிக்கும் பாடலாகும்.
1) பிள்ளையார் 2) சரஸ்வதி 3) சிவபெருமான் 4) அம்மன்

02. காந்தர்வவேதம்
1) சங்கீதம் 2) சித்திரம் 3) நடனம் 4) நாடகம்

03. "மூவரெனவிருவரென" எனும் தேவாரத்தின் பண்.
1) பழந்தக்கராகம் 2) நட்டபாடை 3) கொல்லி 4) நட்டராகம்

04. கல்வித் தெய்வம் எனும் பாடல் அமைந்த இராகம்
1) பிருந்தாவனசாரங்கா 2) மாயாமாளவகௌளை
3) கல்யாணி 4) கம்பீரநாட்டை

05. ஸ்வரவரிசைகள்
1) 8 2) 7 3) 12 4) 10

06. ஆதி தாளத்தின் மொத்த அட்சர எண்ணிக்கை.
1) 6 2) 8 3) 10 4) 4

07. ஸ்வரங்கள் படிப்படியாக ஸ்ருதியில் கூடிச்செல்வது
1) அமரோசை 2) ஆரோசை 3) இறக்கம் 4) அவரோகணம்

08. பஞ்சமத்திற்குரிய தமிழிசைப் பெயர்
1) விளரி 2) துத்தம் 3) உழை 4) இளி

09. மாயாமாளவகௌளை இராகத்தின் மேள எண்
1) 28 2) 29 3) 15 4) 12

10. ஆலயங்களிலும் சமயம் சார்ந்த விழாக்களிலும் பாடப்படும் பாடல்
1) பக்திப் பாடல் 2) சிறுவர் பாடல்
3) மெல்லிசைப் பாடல் 4) நாட்டார் பாடல்

11. தீர்க்க ஸ்வரம் எனப்படுவது,
1) குறில் ஸ்வரம் 2) சின்ன ஸ்வரம் 3) நெடில் ஸ்வரம் 4) ஸப்த ஸ்வரம்

12. சுருதியின் மறுபெயர்
1) அலகு 2) தம்புரா 3) ஸ்வரம் 4) மாதா

13. சதுஸ்ர நடைக்குரிய ஜதிச் சொல்,
1) தகிட 2) தகதிமி 3) தகதகிட 4) திமிதா

14. லகுவின் செய்கைமுறை,
1) ஒருதட்டு 2) ஒரு தட்டும் விரல் எண்ணிக்கையும்
3) ஒரு தட்டும் 3 விரல் எண்ணிக்கையும் 4) தட்டும் வீச்சும்

15. “தையும் பிறந்ததம்மா” எனும் பாடலின் தாளம்
1) ஆதி 2) ரூபகம் 3) சதுஸ்ர ஏகம் 4) ஏகம்

16. ஸா நீதபாம; காரீ, ஸா; என்னும் ஸ்வரக் கோர்வையின் மொத்த அட்சரகால எண்ணிக்கை
1) 20 2) 19 3) 18 4) 15

17. “மூவரெனவிருவரென” என்ற தேவாரத்தின் தலம்
1) திருக்கேதீச்சரம் 2) திருக்கோணேஸ்வரம்
3) சிதம்பரம் 4) திருப்பிரமபுரம்

18. மனித முயற்சியால் உண்டாக்கப்படும் நாதம்
1) பாடும் சங்கீதம் 2) இயற்கைநாதம் 3) அனாகதநாதம் 4) த்வனி

19. நாதயோகி எனப்படுபவர்
1) அருணகிரிநாதர் 2) யோகர்ஸ்வாமிகள்
3) ஸ்ரீ புரந்தரதாஸர் 4) தியாகராஜஸ்வாமிகள்

20. ஸ்ருதிக்காகப் பயன்படுத்தப்படும் தலைசிறந்த தந்திவாத்தியம்
1) சுருதிப்பெட்டி 2) ஹார்மோனியம் 3) தம்புரா 4) வயலின்

(20x2 = 40 புள்ளிகள்)

## பகுதி - II

❖ **முதலாம் வினா உட்பட விரும்பிய 4 வினாக்களுக்கு விடை தருக.**

**01.** 01. முதலாம் தவணையில் நீர் கற்ற இசை உருப்படிகள் 5 தருக.

02. மூன்றாவது ஸ்வரவரிசையின் இராகம், தாளம், ஆரோகணம், அவரோகணம் இயற்றியவர் என்பவற்றைக் குறிப்பிட்டு தாள அங்க அடையாளங்களுடன் பிழையற எழுதுக.

(5+10 = 15 புள்ளிகள்)

**02.** 01. குறில் ஸ்வரத்தின் மறுபெயரைத் தருக.
02. குறில் ஸ்வரத்தை உதாரணத்துடன் விளக்குக.
03. நெடில் ஸ்வரத்தின் மறுபெயரைத் தருக.
04. நெடில் ஸ்வரத்தை உதாரணத்துடன் விளக்குக. (15 புள்ளிகள்)

**03.** 01. அட்சரகாலம் என்றால் என்ன?
02. ஆதி தாளத்தின் மொத்த அட்சர எண்ணிக்கையும், அதன் செய்கைமுறையையும் தருக.
03. கீழ்காணும் ஸ்வரக்கோர்வைகளின் அட்சர எண்ணிக்கைகளைத் தருக.
ஸா ; நீ த பா -
நீதா , பா ம க ரீ ஸ ரீ ; -
மகாரிக ரிஸநீ ; தா மா கரீ -
தபமகரி கமபம ; ரீ கரிஸ ; -

(5+5+5 = 15 புள்ளிகள்)

**04.** 01. ஸ்வரம் என்றால் என்ன?
02. ஸ்வரத்தின் தமிழிசைப் பெயரைத் தருக.
03. சப்த ஸ்வரங்களையும் அதன் தமிழிசைப் பெயர்களையும், வடமொழிப் பெயர்களையும் தருக.

(4+2+9 = 15 புள்ளிகள்)

**05.** சங்கீதக்கலையின் ஆரம்பம் பற்றி விளக்குக. (15 புள்ளிகள்)